
ஓம் சாயி ராம்

# சத்திய வாசகங்கள்



பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின்

அருள்மொழிகள்

சிலவற்றின் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருத்தங்கள்

| பக்கம் | அருள்மொழி இலக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 06 | 01 | நான் | 01 நான் |
| 21 | 131 | முழுவமையுமே | முழுமையுமே |
| 22 | 136 | வைராக்கியம் | வைராக்கியம், |
| 23 | 137ஊ | மேலும் | மேலும், |
| 25 | 138 ஐ | சரணாகதி | சரணாகதி. |
| 27 | 143 | உரைகள் | உரைகல் |
| 28 | 150 | சிறப் பாகவும் | சிறப்பாகவும் |
| 30 | 161 | புழுதியே உடம்பின் தன்மை | புழுதியே உடம்பின் தன்மை. |
| 30 | 161 | ஈர்ப்புக்களையும், எண்ணம், | ஈர்ப்புக்களையும் அவை சார்ந்த எண்ணம், |
| 33 | 178 | அன்மீக | ஆன்மீக |
| 34 | 186 | கடமையே கடவுள் | கடமையே கடவுள்; |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயி ராம்

# சத்திய வாசகங்கள்



பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின்

அருள்மொழிகள்

சிலவற்றின் தொகுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் : அன்றூ ஷோ எனப் பெயர் கொண்ட சாயி பக்தர் தொகுத்த ரப்லெற்ஸ் ஒவ் ற்றுத் எனத் தலையங்கம் கொண்ட ஆங்கில நூல்.

வெளியீடு : சாயி ஆன்மீக சாதனா நிலையம்,
(சாயி இல்லம்)
அரசடி வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

அனுசரணை: திரு.க.கந்தரத்தினம் (லண்டன்)
பெரிய கிணற்றடி,
கூட்டுறவாளர் தெரு,
அளவெட்டி.

பதிப்பு : பிரகாஷ் பதிப்பகம்,
கரவச்சை, அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

திகதி : 01.06.2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகவான்

ஸ்ரீசத்திய சாயி பாபாவின்

திருப்பாத கமலங்களில்

இந்நூல் சமர்ப்பணம் ஆகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுசரணையாளரதும்
# வெளியீட்டாளரினதும்
# வாசகர்களுக்கான ஆசியுரை

நித்திய ஆனந்தம் நிச்சயம் நல்கிடும்
சத்திய வாசகங்கள் தமை வாசகர்
கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

(ஈண்டு, நல்கிடும் என்பது தந்திடும் என்றும்
கற்க என்பது கற்றால் என்றும்
நிற்க என்பது நின்றால் என்றும் பொருள்படும்)

சத்திய நெறியினில் நின்றிடுவீர், நின்று
நித்திய ஆனந்தம் துய்த்திடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி அவதார நோக்கம்

பரம்பொருள் யுகந்தோறும் ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக தன்னை ஓர் அவதாரம் ஆக்கிக் கொண்டு இவ்வுலகில் வந்துள்ளது. இந்த அவதாரமோ உலகளாவிய, உலகை - உலுப்புகிற நெருக்கடிகளை எதிர்கொள்ளவென வந்துள்ளது. இந்தவகையில் இவ்வவதாரம் வித்தியாசமானது. “கடவுள் என்பவர் யார்? அவர் எங்குள்ளார்? ” என்று கேட்கும் அளவுக்கு பேதைமையும் அறிவகந்தையும் கொண்டவர்களாக மனிதர்கள் இருக்கும் காலமிது. ஒழுக்கத்தின் போர்வையை ஒழுக்கமின்மை போர்த்திக் கொண்டு மனிதனை பாவப் படுகுழியில் ஆட்டிப்படைக்கிறது. சத்தியம் ஒரு பொறியாக கண்டிக்கப்படுகிறது. நீதி பரிகசிக்கப்படுகிறது. சாதுக்கள் சமூகவிரோதிகள் என்று குற்றம் சாட்டப்பட்டுத் துன்புறுத்தப்படுகின்றனர். இக் காரணங்களால் இவ்வவதாரம் சத்தியத்தை நிலைநிறுத்தவும், பொய்மையை நசுக்கவும் வருகை தந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உங்களைப் போலவே நடந்து கொள்கின்றேன், உலாவுகின்றேன், பாடுகின்றேன், சிரிக்கின்றேன், பிரயாணம் செய்கின்றேன் ஆயினும் இடையிடையே என்னிடமிருந்து பலத்த அடியையும் எதிர்பாருங்கள். உங்கள் தவறுக்கு தக்கவாறு எச்சரிப்பேன் அல்லது தண்டிப்பேன் அல்லது வாட்டுவேன். அதேவேளை நீங்கள் நல்லொழுக்க சீலராயின் உங்கள் தர்மத்துக்காக ஆறுதல் தருவேன். எல்லோருக்கும் நீதி வழங்குவேன்.

**02. சத்தியசாயி அவதாரம் தன்மீது விதித்துள்ள பணிகள்**

i. சாந்தமான அன்பின் மூலம் மனிதரை ஒழுக்கமின்மை, அநீதி, பேராசை, பொறாமை ஆகிய குறுக்குப் பாதைகளிலிருந்து மீட்டு சாதனை என்னும் இராஜ பாதையில் வழி நடத்தவும்,

ii. காலவெள்ளத்தில் சிக்குண்டு சிதைவுற்றுப் பலமிழந்த மனிதர்களின் ஆன்மீக பிறப்புரிமையை சரியாக நெறிப்படுத்தவும்,

iii. தனிமனித மேம்பாடுகளுக்கு சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை ஆகிய விழுமியங்கள் ஆதாரமாய் அமைவதை நிரூபிக்கவும்,

iv. பயத்தாலும், வியாகூலத்தாலும் பீடிக்கப்பட்டுள்ள நல்லிதயங்களில் நம்பிக்கையையும், திருப்தி யையும் தூண்டவும்,

எஜமானாகிய நான் புட்டபர்த்தியில் அவதரித் துள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. என் பெயர் சத்தியசாயி. இதன் பொருள் சத்தியத்தைச் சார்ந்திருப்பவன் என்பதாகும்.

04. அன்பே என் உருவம்
சத்தியமே என் மூச்சு
ஆனந்தமே என் உணவு
என் வாழ்வே என் செய்தி
விரிவாக்கமே என் வாழ்வு

05. இனம் ஒன்றுதான் உள்ளது
அது மனித இனம்
சமயம் ஒன்றுதான் உள்ளது
அது அன்பெனும் சமயம்
மொழி ஒன்றுதான் உள்ளது
அது இருதயத்தின் மொழி
இறைவன் ஒருவனே உள்ளான்
அவன் சர்வ வியாபி.

06. அன்புடன் நாளைத் தொடங்குங்கள்
அன்பால் நாளை நிரப்புங்கள்
அன்புடன் நாளை போக்குங்கள்
அன்புடன் நாளை முடிவுறுத்துங்கள்.

07. சர்வவியாபி ஆகிய என்னை எங்கும் காணலாம் எனினும், என் பெருமை கீர்த்தனம் செய்யப்படும் இடங்களில் நான் ஸ்திரப்படுத்தப்பட்டிருப்பதை காண்பீர்கள்.

08. நான் எதை உனக்குத்தர விரும்புகிறேனோ, அதனை நீ விரும்புவதற்காக, நீ விரும்புவதை நான் உனக்குத் தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. ஒரு சாதகன் ஒரு சாதுவாக மலர வேண்டும்.

10. இறைவனை அடைவதற்கு நாமஸ்மரணை ஒரு மார்க்கம் ஆகும்.

11. இறைவனை ஒரு பட வடிவத்துக்குள் கட்டுப் படுத்தாதீர்கள். அவரை ஒரு விக்கிரகத்துக்குள் குறுக்காதீர்கள். எல்லா உருவங்களும் அவரே, எல்லா நாமங்களும் அவரே.

12. மற்றவர்களை வசப்படுத்த முயற்சிக்காதே. உன்னையே வசப்படுத்து - உன் புலன்களை, உன் மனதை.

13. மானிட சேவையே மாதவ சேவை.

14. நல்லொழுக்கமே பிள்ளைகளை வளர்க்கும் சாதனம் ஆகும்.

15. மிருக உணர்ச்சிகள் அப்புறப்படுத்தப்பட்டால் அவ்விடத்தில் தெய்வீக உணர்வுகள் பெருக்கெடுக்க ஆரம்பிக்கும்.

16. உணவுக்கு ஏற்றாற்போல் மனம் அமைகிறது. மனதுக்கு ஏற்றாற்போல் எண்ணம் அமைகிறது. எண்ணத்துக்கு ஏற்றாற் போல் செயல் அமைகிறது.

17. சொல்லடக்கமே சிறந்த அணிகலனும் கவசமும் ஆகும்.

18. என்னை நோக்கி நீ ஓர் அடி (சுவடு) வைத்தால் உன்னை நோக்கி நான் நூறு அடிகள் (சுவடுகள்) வைப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. நீங்கள் தெய்வத்தின் வடிவங்கள்.

20. ஆக்கபூர்வமான சிந்தனைகளையும் தேறுதல் தரும் வார்த்தைகளையும் தயை கொண்ட செயல் களையும் கொண்டிருங்கள்.

21. “நான் விரும்புவது அமைதி” என்பதில் “நான்” என்பது அகங்காரம். விரும்புவது என்பது ஆசைப்படுவது உங்கள் தெய்வ சொருபத்தை மறந்து, உங்களை உடல், மனம், புத்தி. இவற்றுடன் இனங் காண்பதையும், அதர்ம ஆசைகளையும் அகற்றுங்கள். நீங்கள் அமைதி அடைவீர்கள்.

22. அன்பு, தன்னுணர்ச்சி (அகங்காரம்) அற்றது. தன்னுணர்ச்சி, அன்பு அற்றது.

23. இந்த அவதாரத்தில் கொடியவர்கள் அழிக்கப்பட மாட்டார்கள்; அவர்கள் திருத்தப்படுவார்கள்.

24. உணவு கடவுள் - உணவை வீணாக்காதே
பணம் கடவுள் - பணத்தை வீணாக்காதே
நேரம் கடவுள் - நேரத்தை வீணாக்காதே
சக்தி கடவுள் - சக்தியை வீணாக்காதே

25. இறைவனோடு வாழ்வதே உண்மையான கல்வி
இறைவனுக்காக வாழ்வதே உண்மையான பக்தி
இறைவனில் வாழ்வதே உண்மையான ஆன்மீகம்.

26. ஆசை பற்றிலிருந்து வருகின்றது. விடுதலை பற்றின்மை யிலிருந்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. எவருடைய விசுவாசத்தையும் குழப்பவோ அழிக்கவோ நான் வரவில்லை. ஒவ்வொருவருடைய விசுவாசத்தையும் உறுதிப்படுத்தவே வந்துள்ளேன். இந்த வகையில் ஒரு கிறிஸ்தவன் மேலும் நல்ல கிறிஸ்தவனாகவும், ஒரு முஸ்லீம் மேலும் நல்ல முஸ்லீமாகவும், ஓர் இந்து மேலும் நல்ல இந்துவாகவும் ஆகின்றான்.

28. ஒழுங்கு நியமமற்ற அரசியலும், சீலமற்ற கல்வியும், மனிதநேயமற்ற விஞ்ஞானமும், நீதிநெறி வழுவிய வணிகமும் பயனற்றவை மட்டுமல்ல, நேரடியாகவே ஆபத்தானவையும் ஆகும்.

29. நீ விரும்புவதுபோல் எங்கிருந்தாலும், எதைச் செய்ய நேர்ந்தாலும், இதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள் - நீ செய்வதெல்லாம் எனக்குத் தெரியும். எல்லோருடைய உள்ளார்ந்த ஆட்சியாளன் நானே.

30. இறைவனால் எந்த வடிவத்திலும் வர முடியும். அப்படி வருவார். நீ விரும்பாத எதிர்பார்க்காத வடிவத்தில் இறைவன் வந்தாலும் அடையாளம் காண மறுக்காதே

31. விவேகத்தின் முடிவு சுதந்திரம் கலாச்சாரத்தின் முடிவு பூரணத்துவம். புலமையின் முடிவு அன்பு. கல்வியின் முடிவு சீலம்.

32. நான் எல்லை அற்றவன்; அளவிட முடியாதவன்; தனித்தன்மை வாய்ந்தவன்; ஒப்பிட முடியாதவன்; எனக்கு மட்டுமே இணையானவன் என் சொந்த அளவுகோலும் சாட்சியும் நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. தியாகமே அதிசிறந்த கொடை.

34. மௌனமே பிரமன்.

35. நல்லவனாயிரு நல்லதைச்செய் நல்லதைக் காண்.

36. எல்லோரிடத்திலும் அன்பாயிரு எல்லோருக்கும் சேவை செய்.

37. அகம்பாவத்தின் சுவடு இல்லாமல் சேவை செய்.

38. புலன்களை வெல்வதிலேயே வீரம் தங்கியுள்ளது.

39. சமுதாயத்தில் கரங்களும் வனத்தில் சிரசும் (அகங்காரமற்று இறைவனின் கருவி என்ற பாவனையில் சேவை செய்)

40. விழிப்புணர்வு உள்ள நாளே உண்மையான பிறந்த நாள்.

41. அன்பே இறைவன். அன்பில் வாழ்.

42. இறை நம்பிக்கை எனும் விதையை விதைக்கவே நான் வந்துள்ளேன்.

43. மனிதர்கள் தன்னைச் செவிமடுக்கவும் தன்னுடன் தொடர்பு கொள்ளவும், தன்மீது அன்பு செலுத்தவும், தன்னை வணங்கவும், தனக்குக் கீழ்ப்படியவும், என கடவுள் மனித உருக்கொண்டு வந்து மனிதரிடையே உலாவுகின்றார்.

44. சத்தியம் உங்கள் தந்தை. அன்பு உங்கள் தாய். விவேகம் உங்கள் மகன். அமைதி உங்கள் மகள். யோகிகள் உங்கள் நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. உன் தெய்வீக பிரக்ஞையுடன் ஒன்றி வாழ். நீ எதைச் செய்ய உத்தேசிக்கின்றாயோ, அதைச் சொல். நீ அனுபவித்ததை எடுத்துரை. கூடுதலாகவும் வேண்டாம், குறைவாகவும் வேண்டாம்.

46. நான் இங்கிருக்கும் போது உனக்கேன் பயம்? சாயி எங்கும் என்றும் உன்னுடன் இருப்பதை நம்பு.

47. கோபத்தை கோபத்தாலோ, குரூரத்தை குரூரத்தாலோ, வெறுப்பை வெறுப்பாலோ நீக்க முடியாது. கோபத்தை சகிப்புத்தன்மையால் மட்டும் அடக்க முடியும். குரூரத்தை அகிம்சையால் வெல்ல முடியும். வெறுப்பு கொடைக்கும் தயைக்கும் பணியும்.

48. அன்பை விட சக்தி வாய்ந்த
ஆயுதம் எதுவும் இல்லை.

49. இறைவனே ஆன்மீக மருத்துவர். இறைவனைத் தேடுங்கள். இறைவனில் தங்கியிருங்கள். நீங்கள் ஆசைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

50. கல்விமான் தனக்கு சலுகைகளிலும் கூடிய உபகார பந்தங்கள் உண்டென்றும் உரிமைகளிலும் கூடிய கடமைகள் உண்டென்றும் புரிந்து கொள்ள வேண்டும்.

51. அன்பற்ற கடமை வெறுக்கத்தக்கது. அன்புடனான கடமை விரும்பத்தக்கது. கடமை அற்ற அன்பு தெய்வீகமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. A,B,C of life

(1) Always Be Careful - எப்பொழுதும் கவனமாயிரு

(2) Avoid Bad Company - கெட்ட சகவாசத்தை தவிர்

53. உண்மையான பக்தி எப்பொழுதும் தனித்துவமானதாயும் நிபந்தனை அற்றதாயும் இருக்கும்.

54. திருப்தியாயிரு. இறைவனின் விருப்பத்துக்கு மாறாக எதுவும் நடைபெற முடியாது.

55. நல்லியல்பின் விரிவே வாழ்வு. அதன் குறுகுதலே இறப்பு.

56. வாழ்க்கை என்பது தெய்வீகப் பாதையிலான பயணம் ஆகும்.

57. மனிதன் பிறந்தது பகிரவும் சேவிக்கவுமே அன்றி பறிக்கவும் கவலைப்படவும் அல்ல.

58. (அறநெறியில்) ஒத்துப்போகவும் இணங்கவும் சேர்த்துக் கொள்ளவும் கற்றுக்கொள்.

59. பகட்டையும், காட்சிக்குரியவராய் இருப்பதையும், தற்புகழ்ச்சியையும் தவிர்.

60. எளிமையாகவும் கபடமற்றும் இனியோனாகவும் இரு.

61. மகிழ்ஊர்திகள் (மோட்டார் வண்டிகள்), திருத்துமிடத்துக்கு வருவது போல, நீ பிரசாந்தி நிலையத்திற்கு வருதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. இறைவன் எல்லோருக்கும் உரியவர். அவர் பிரபஞ்சம் தழுவியவர்.

63. அன்பைக் கொடு; அன்பை வாங்கு.

64. நீ என்னை நேசித்தால் மட்டும் போதாது நான் உன்னை நேசிப்பதையும் உறுதி செய்து கொள் (அதாவது என்னால் நேசிக்கப்படக்கூடியவனாயிரு)

65. கொடுத்தலும், மன்னித்தலும் ஆக அன்பு வாழ்கிறது. பெற்றுக்கொள்வதும் மறப்பதும் ஆக தன்னுணர்ச்சி வாழ்கிறது.

66. வேண்டற்பாலது ஒற்றுமையே; சமுதாயம் அல்ல.

67. தெய்வீக அறிவைத் திறமையாகக் கையாள்வ திலேயே (மனதின்) சமத்துவம் தங்கியுள்ளது.

68. நற்செயல்கள் எனும் விதைகளை விதைத்தால் மகிழ்ச்சி எனும் அறுவடை கிடைக்கும்.

69. வாழ்க்கை இறைவனை நோக்கிய யாத்திரை ஆகும். பரிசுத்தமான இலக்கு இறைவனிலும், அதற்கான பாதை உங்கள் முன்னேயும் உள்ளன.

70. எவ்வளவுக்கெவ்வளவு விருப்பங்கள் குறைகின் றனவோ அவ்வளவுக்கவ்வளவு சுதந்திரம் கூடுகின்றது.

71. விழிமின்! எழுமின்! இறைவன் எனும் இலக்கை சேரும்வரை இடைநிற்காதீர்.

72. முதலில் உங்களை அறியுங்கள். மற்றெல்லாம் பின்னர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. ஆரோக்கியத்திற்கும் சந்தோஷத்திற்கும் திறவு கோல் மனமே.

74. திருப்தியே சுவர்க்கம். துயரமே நரகம்.

75. அன்பு விரிவுக்கு இட்டுச்செல்லும், வெறுப்பு குறுக்கத்தை உண்டாக்கும்.

76. இறைவன் உங்களில் இருந்து தூரத்திலும் இல்லை; உங்களில் இருந்து வேறுபட்டவரும் அல்ல.

77. இறைவன் சர்வ வியாபியாக உள்ளார். இறைவனைவிட இரண்டாவது என்றொன்று எங்குமே இல்லை.

78. அன்பு மகனே! எல்லா வாழ்வும் ஒன்றே. ஒவ்வொருவருடனும் ஒரேமாதிரி இரு (பற்றற்று உறவுக்கேற்ப கடமை செய்).

79. முதலில் செயற்பாடு, பின்னரே புத்திமதி.

80. மனம் வேற்றுமையைக் காணும். அன்பு ஒற்றுமையைக் காணும்.

81. சேவையில் ஈடுபடுத்தப்படாத மனம் பேயின் தொழிற்பேட்டை.

82. சரியாயிரு; சரியானதைச் செய், அவ்வளவே உனது உரிமை.

83. எல்லா மனிதரிலும் இறைவனைக் காணும்வரை மானிட சேவை செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. சிரஞ்சீவியாயிருக்க (நித்தியமாயிருக்க) ஒரேவழி இழுக்கத்தை (ஒழுக்கமின்மையை) அகற்றுவதே.

85. இறைவனை மறவாதே. உலக பந்தத்தில் நம்பிக்கை வையாதே. இறப்பதற்கு அஞ்சாதே.

86. சேவையிலும் பயன் மிக்க பிரார்த்தனை கிடையாது.

87. முற்றுமுழுதான ஆசையின்மையே பூரண சுதந்திரமாகும்.

88. சாயியின் செயற்பாடுகள் எப்பொழுதுமே சுயநல மற்றவை, புனிதமானவை, நன்மையானவை.

89. தியானத்திலும் சேவை உன்னதமானது என்பதையும், புலன் இன்பத்திலும் அதன் தியாகம் சிறந்தது என்பதையும் ஞாபகத்தில் வைத்திரு.

90. சத்தியம் அணுவிலும் அடிப்படையானது. (நுண்ணியது).

91. உலகில் ஒவ்வொரு செயற்பாடும் இறைவனை நோக்கிச் செல்கிறது.

92. காமம், கோபம், பற்று, தற்பெருமை, வெறுப்பு, பேராசை ஆகிய ஆறு எதிரிகளையும் எதிர்கொள்.

93. விஞ்ஞானம் மனதிற்கு உட்பட்டது, ஆன்மீகம் மனதிற்கு அப்பாற்பட்டது.

94. உற்சாகம் சொர்க்கம், மனச்சோர்வு நரகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. வாழ்க்கை, "நான்" என்பதிலிருந்து "நாம்" என்பதை நோக்கிய பயணம் ஆகும்.

96. உதவும் கரங்கள் பிரார்த்திக்கும் உதடுகளைவிட தெய்வீகமானவை.

97. ஆசை, நம்பிக்கையின்மைக்கு இட்டுச்செல்கின்றது.

98. கெட்ட பார்வை பிறரில் கெடுதலைக் காண் கின்றது.

99. விறகில் தீ உள்ளதுபோல மனிதனில் இறைவன் உள்ளான்.

100. உங்கள் தன்னலமற்ற சேவையால் மனிதனின் சகோதரத்துவத்தையும், இறைவனின் பித்ருத்து வத்தையும் சரியாக அறிந்து கொள்ளுங்கள்.

101. (புலன்) இன்பம் என்பது இரண்டு துன்பங்களுக் கிடையே உள்ள இடைவெளியாகும்.

102. மனித உடலில் உள்ள ஒவ்வொரு கலமும், கடவுளே. ஒவ்வொருவருக்கும் கடவுளே மூலாதாரம்.

103. எமக்குக் கிடைப்பது நாம் விரும்புவது அல்ல. எம் தகுதிக்கு ஏற்றது எதுவோ அதுவே.

104. நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம். அதனைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

105. வாழ்க்கையில் ஒவ்வொருவர் எதிர்கொள்வது அவரவரின் பிராரப்தம் (விதி) அதை எவ்வாறு எதிர்கொள்கிறார் என்பது புருஷோத்தம் (மதி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. மனிதரின் சகோதரத்துவத்திலும் இறைவனின் பித்ருவத்திலும் நம்பிக்கை கொள்.

107. கல்வியின் மதிப்பு மிக்க கொடை சீலம் ஆகும்.

108. ஒவ்வொரு சமயமும், சத்தியத்தின் பாதையை ஒளிர்விக்கும் விளக்கு ஆகும்.

109. அவசரம் வீண் விரயத்தை உண்டாக்கும். வீண் விரயம் கவலையை உண்டாக்கும். எனவே அவசரப்படாதே (பரபரப்பைத் தவிர்)

110. மனித இதயம் தெய்வம் உறைகோவில். "எனது", "உனது" என்ற கருத்துக்களால் அதனை பற்ற வைக்காதே.

111. இறைவன் அன்பே வடிவானவர், அவரது தூது சேவை ஆகும்.

112. அன்பே இறைவன். இறைவனே அன்பு எல்லோரையும் நேசித்து, எல்லோரையும் சேவித்து அன்பில் வாழ்.

113. நேரத்தை வீணாக்குவது, வாழ்க்கையை வீணாக்குவது ஆகும்.

114. உங்கள் உண்மையான இயல்பு சத்சித் ஆனந்தம் (நித்திய இருப்பு, தெய்வீக உணர்வு, நித்திய ஆனந்தம்)

115. அமைதியின் ஆழத்திலேயே இறைவனின் குரலைக் கேட்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116. எல்லாக் கெட்ட பழக்கங்களையும் விட்டுவிடு. அவற்றில் சிறிதும் மகிழ்ச்சி இல்லை.

117. தயை கொண்ட இதயம் இறைவனின் இருப்பிடம்.

118. அறியாமையுடனான பந்தத்திலும் இறப்பு இனியது.

119. நீ ஒளியில் இருக்கிறாய்; ஒளி உன்னில் இருக்கிறது. நீயே ஒளி ஆவாய்.

120. எல்லோரையும் நேசி. எல்லோரையும் சேவி. சேவையே வழிபாடு. கடமையே கடவுள்.

121. ஒரு மகிழ்வான வாழ்வின் அடிப்படை அன்பே அன்றி காமம் அல்ல.

122. வாழ்க்கையே அதி சிறந்த ஆசான். இயற்கையே அதி சிறந்த உபதேசகர்.

சத்தியமே பாதுகாவலனான கடவுள், சத்தி யத்தைவிட பலம்வாய்ந்த பாதுகாவலன் இல்லை.

123. எம்மில் நம்பிக்கை ; இறைவனில் நம்பிக்கை உயர்வதற்கான இரகசியம் இதுவே. (அன்பே இறைவன் என்பதால்).

124. எல்லா சாதனைகளினதும் உள்ளார்ந்த நோக்கம் பரிசுத்த இதயமே.

125. அழகு, நல்லியல்பு, சத்தியம், சிவம், சுந்தரம் இவையே நீ. நீயாகவே இரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126. அவதார வாழ்வின் ஒவ்வோர் அடியும் (சுவடும்) முன்னர் நிர்ணயிக்கப்பட்டதே. சத்தியத்தினதும் தர்மத்தினதும் வேர்களுக்கு உரமிட இராமர் வந்தார். அமைதியையும் அன்பையும் (சாந்தி, பிரேமை) போஷிக்க கிருஷ்ணர் வந்தார். இந்த நான்கும் வரண்டு போகும் நிலையில் இருந்ததால் சாயி அவதாரம் வந்துள்ளது.

127. அதி நுண்ணிய அணு முதல் பேரண்டம் வரை முழு பிரபஞ்சமுமே ஆதிபராசக்தியினின்றும் தோன்றி எல்லாவற்றிலும் உட்பொருளாய் இருந்து சதா சுறுசுறுப்பாகவும் விழிப்பாகவும் உள்ள சக்தி அலைகளின் திரட்சியே.

128. உங்களிடம் இருந்து பலவீனத்தையும் பயத்தையும் அகற்றி உங்களுக்கு வீரத்தையும், மகிழ்ச்சியையும் தருவதை என் கடப்பாடாகக் கொண்டுள்ளேன். உங்களை பாவிகள் என்று கண்டிக்காதிர்கள். தவறுக்கான தவறான பெயரே பாவம் என்பதாகும்.

129. நீங்கள் உளப்பூர்வமாகப் பச்சாதப்பட்டு (வருந்தி) தீயதை மீண்டும் தொடரமாட்டேன் என்று பிரதிக்ஞை செய்து அதனை நிறைவேற்றுவீர் களானால், உங்கள் எல்லாத் தவறுகளையும் நான் மன்னிப்பேன்.

130. எல்லா ஜீவராசிகளிலும் உள்ளுறையும் ஆன்மா நானே எல்லாவற்றினதும் ஆரம்பமும் இடையும் முடிவும் நானே. பிரபஞ்சத்தில் நீங்கள் காணும் யாவையுமே - அசைவனவும், அசைவற்றனவும் ஆன்மாவின் வெளிப்பாடுகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131. ஒவ்வொரு மனிதனிடமும் சென்று அவர வரிடத்தில் தூங்கிக் கிடக்கும் தெய்வீகத்தை தட்டி எழுப்புவதற்காக, தெய்வீக சக்தியின் முழுவமையுமே சத்திய இயல்பாக மனித குலத்திடையே வந்துள்ளது.

132. ஒரு தாய், தன் சேயை என்றும் கைவிட மாட்டாள். சேய், தன் கோபத்தையும் எதிர்ப்பையும் தன்மீது கொட்டினாலும், தாய் சேயை விழவிடாமல் காவிக் கொண்டே இருப்பாள்.

நான் வந்திருப்பது உங்களுக்கு உதவ, உங்களுடனே வர, உங்களைத் தூக்கிச் செல்ல. நான் என் பணியில் இருந்து வழுவமாட்டேன். மேலும் என் பணிக்கு உதவும் எல்லாக் குழந்தைகளுக்கும் நன்றியாயிருப்பேன்.

133. வாழ்க்கையின் நான்கு விழுமியங்கள்

சீரான வாழ்வு
சீரான உழைப்பு
சீரான விருப்பு
உலக பந்தத்தில் இருந்து விடுதலை

இவை வாகனத்தின் சில்லுகள் என்றால், உள்ளிருந்து இந் நான்கையும் உந்தும் விசை மனம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

134. புத்தியே ஆழி. நம்பிக்கையே ரயரில் உள்ள குழாயில் (ரியூப்பில்) நிறையும் காற்று. ஆனந்தமே சேரிடம். வாழ்வை போஷிக்கும் சுவாசம் இவ்வானந்தமே ஆகும்.

ஆகவே உங்கள் எண்ணங்கள். சொற்கள், செயல்கள் யாவற்றையும் இறைவனுக்கு அர்ப்பணியுங்கள்.

135. **தியாகத்தின் தன்மை**

தியாகத்தை சிறப்பிப்பது கணியங்கள் அல்ல ; தரமே. ஒரு பேரரசனுக்கு தங்கம் வழங்குவது என்பது ஒரு சுபாவமாயிருக்கும். ஆயினும் ஒரு வறிய பெண் தன் வறுமையையும் பொருட் படுத்தாது தன் குருவுக்கு மாதுளம்பழம் ஒன்றை வழங்குவாளானால், அந்தத் தியாகத்தின் பெருமையை என்னென்பது? அவள் தன் வாழ்வையும் பொருட்படுத்தாது அந்தக் கனியை வழங்கினாள். இதனிலும் பெரிய தியாகம் வேறெது இருக்க முடியும்?

உங்களிடம் மிதமிஞ்சி இருப்பதை வழங்குவது தியாகம் அல்ல. உண்மையான தியாகம் என்பது உங்களுக்கு மிகவும் பிரியமான ஒன்றை - நீங்கள் பெறுமதியாகக் கருதும் ஒன்றை வழங்குவதே ஆகும்.

136. உங்கள் பிரதிக்ஞையின் (வைராக்கிய தீர்மானம்) பலத்தை தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.

தனிமனிதன் சமுதாயத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளான். எனவே அவனது பரபரப்பு சமுதாயத்தை பாதிக்கிறது. ஒரு நல்ல தனி மனித வைராக்கியம். உலகின் கேஷமத்துக்கும் நல்வாழ்வுக்கும் உத்தரவாத மாக அமைகிறது. உலகம் என்பது தனி மனிதனின் பிரதி விம்பமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. தெய்வீகத்தை நோக்கிய பாதையில் பத்துப் படிகள்.

அ) தாய் நாட்டை நேசி, தாய் நாட்டுக்கு சேவை செய். மற்றவர்களின் தாய் நாட்டை வெறுக்கவும் வேண்டாம். அவர்களை துன்புறுத்தவும் வேண்டாம்.

ஆ) ஒவ்வொரு மதத்தையும் மதியுங்கள். ஒவ்வொரு மதமுமே ஒரே தெய்வத்தை நோக்கிய பாதையே.

இ) பாரபட்சம் இன்றி எல்லா மதத்தினரையும் நேசியுங்கள். மனித வர்க்கம் ஒரே சமூகம் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

ஈ) உங்கள் வீட்டையும் சுற்றாடலையும் சுத்தமாக வைத்திருங்கள். அது உங்களதும் உங்கள் சமூகத்தினதும் ஆரோக் கியத்தையும் மகிழ்ச்சியையும் உறுதிப் படுத்தும்.

உ) பிச்சைக்காரர் கைநீட்டும் போது காசை எறியாதீர்கள். அவர்கள் தம்மில் தாமே தங்கியிருக்க உதவுங்கள். நோயாளி களுக்கும், வயோதிபர்களுக்கும் உணவு, இருப்பிடம், அன்பு, ஆதரவு அளியுங்கள்.

ஊ) இலஞ்சம் கொடுத்து மற்றவர்களைத் தீமை செய்யத் தூண்டாதீர்கள். மேலும் இலஞ்சம் வாங்கி உங்களைக் கீழ்மைப்படுத்தாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ) எக்காரணம் கொண்டும் பொறாமை, வெறுப்பு, குரோதம் இவற்றை வளர்க்காதீர்கள்.

ஏ) உங்கள் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய மற்றவர்களில் தங்கியிருக்காதீர்கள். மற்றையோருக்குச் சேவை செய்யப் புறப்படு முன் உங்கள் தனிப்பட்ட சேவகனா யிருங்கள்.

ஐ) நாட்டின் சட்டதிட்டங்களுக்கு அமைய ஒழுகி ஓர் உதாரண பிரசையாய் வாழுங்கள்.

ஒ) இறைவனைப் போற்றி வழிபடுங்கள். பாவத்தை வெறுங்கள்.

138. இறைவனை நோக்கிய யாத்திரையில் ஒன்பது படிகள். (நவ வித பக்தி)

**அ) சிரவணம்**

இறைவனதும் இறைவனின் பல்வேறு தோற்றங் களினதும் புகழையும் மாட்சிமையையும் கேட்பதற்கு விருப்பத்தை விருத்தி செய்தல்.

**ஆ) கீர்த்தனம்**

இறைவனையும் அவனது லீலைகளையும் பற்றிப் பாடுதல்

**இ) விஷ்ணு ஸ்மரணம்**

உள்ளத்தில் இறைவனை இருத்தி நினைவு கூர்ந்து கொண்டிருத்தல். அவனது அழகையும் கருணையையும் ஆழ்ந்து சிந்தித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ) **பாத சேவன்**

இறைவனின் பாதகமலங்களில் மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை வழிபடுதல்.

உ) **அர்ச்சனை**

முறையான சமயச்சடங்குகள் மூலம் வழிபாடு செய்தல்

ஊ) **வந்தனம்**

பக்தன் எல்லா ஜீவராசிகளிடத்தும் எல்லாப் பொருட்களிடத்தும் இறைவனைக் கண்டு, இயற்கையிலும் சகல ஜீவராசிகளிலும் பயபக்தியை வளர்த்தல்.

எ) **தாசியம்**

தாழ்வு மனப்பான்மையோ, உயர்வு மனப் பான்மையோ இன்றி எல்லோரிடத்தும் ஈடுபாடு மிக்க சேவகனாகத் தன்னை ஈடுபடுத்தல்.

ஏ) **சாக்கியம்**

இறைவனுக்கு அண்மித்த தோழனாகவும், நண்பனாகவும் தன்னைக் கருதி இறைவனின் வல்லமை, இரக்கம், வெற்றிகள், சாதனைகள் இவற்றைப் பகிர்தல். (இவற்றை தானும் சாதித்தல்)

ஐ) **ஆத்ம நிவேதனம்**

பக்தனின் பூரண சரணாகதி இறுதியில் இறைவனின் விருப்பத்துக்குத் தன்னைப் பூரணமாக ஒப்புக்கொடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139. இதயத்தில் நேர்மை இருந்தால்
குணசீலத்தின் அழகு மிளிரும்
சீலத்தில் அழகு இருந்தால்.
இல்லத்தில் ஐக்கியம் நிலவும்.
இல்லத்தில் ஐக்கியம் நிலவினால்
நாட்டில் ஒழுங்கு இருக்கும்
நாட்டில் ஒழுங்கு இருந்தால்
உலகில் சாந்தி நிலவும்.

140. வெவ்வேறு நம்பிக்கைகள் இருக்கட்டும். அவை மிளிர்ந்து இறைவனின் புகழ் எல்லா மொழி களிலும், எல்லா மெட்டுகளிலும் பாடப்படட்டும். இதுவே இலட்சியமாக அமையட்டும்.

141. முழு மனித வர்க்கமுமே ஒரே சமயத்தைச் சார்ந்தது தான். அது மனித சமயம் எல்லா மனிதருக்கும் இறைவனே தந்தை. ஆக, எல்லா மனிதரும் சகோதரர்களே.

142. எந்த ஒரு சமயமும் அது காட்டும் நம்பிக்கையையே பின்பற்றி ஒழுகுபவர்களுக்கு மட்டும் அருள் புரியும் ஒரு தனிப்பட்ட கடவுளைக் கொண்டிருக்கவில்லை.

மனிதத்துவத்திலிருந்து தெய்வீகத்தை நோக்கிப் பயணம் செய்வதே மனிதனுக்கான நெறி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

143. உங்கள் ஒவ்வொரு செயலும் மற்றவர்களைத் துன்புறுத்துமா என நீங்கள் பரிசோதிக்க வேண்டும். அவ்வாறு துன்புறுத்துமானால் அச்செயலைத் தவிருங்கள். உங்களுக்கு மற்ற வர்கள் எதைச் செய்தலாகாது என நீங்கள் விரும்புகிறீர்களோ அதனை மற்றவர்களுக்குச் செய்யாதீர்கள். இதுவே அதி உயர்ந்த நெறி ஆகும். ஆம், பிழையிலிருந்து சரியானதைப் பகுத்துணர்வதற்கு இதுவே சிறந்த உரைகள் ஆகும்.

144. நம்பிக்கைகளுக்கிடையிலான வேறுபாடுகளுக்கு மதிப்பளியுங்கள். ஒற்றுமை எனும் சுடரை அவை அணைக்காத வரையில், அவை செல்லுபடியாகும் என ஏற்றுக்கொள்ளுங்கள்.

145. ஒவ்வொரு சமயமும் அறவழியையே மனிதனுக்குக் கற்பிக்கிறது. அவன் அதனைத் தெரிந்து கொண்டு அவ்வழியே வீறுநடை போடல் வேண்டும். காட்சி நேரியதானால் பிரிவினை முயற்சிகள் என் செய்யும்?

146. பாதத்தில் முள் குத்தினால் கண்களில் கண்ணீர் மல்குகிறது. ஏனெனில் சகல அங்கங்களும். உறுப்புக்களும் உள்ளார்த்தமாய் தம்முள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே உலகின் எல்லா நாடுகளும் தம்முள் தொடர்புபட்டுள்ளன. எனவே, எந்த ஒரு நாடோ, சமூகமோ, ஏனைய நாடுகளையும் சமூகங் களையும் பாதிக்காதவாறு தனித்து துன்புற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

147. **புத்த சமயம்**

காரண - காரிய (செயல் - விளைவு) சக்கரத்தையும் அதனை நிவர்த்தி செய்யும் தர்மத்தையும் நினைவு கூருங்கள்.

148. **இந்து சமயம்**

உங்கள் இதயத்திலும், பிரபஞ்சத்தின் இதயத்திலும் முழங்கிக் கொண்டிருக்கும் "ஓம்" எனும் மூலாதார பிரணவ ஒலியை அவதானமாக செவிமடுங்கள்.

149. **கிறிஸ்தவம்**

நீங்கள் நித்தியத்துவம் அடைய I எனும் உங்கள் அகங்கார உணர்ச்சியை குறுக்கே வெட்டுங்கள்.

150. **ஸோறோஸ்தியம்**

எல்லாக் கசப்புணர்வுகளையும் தீயிலிட்டுப் பொசுக்கி, சிறப் பாகவும், மேன்மையாகவும் உள்ள தெய்வீகமாக எழுந்திருங்கள்.

151. **இஸ்லாம்**

பிறையினின்றும் விலகாத நட்சத்திரம் போல உறுதியான நம்பிக்கையில் நிலைத்திருங்கள்.

152. மொழி, சமயம், இனம், தேசியம் இவற்றின் அடிப்படையிலான பேதங்களுக்கு இடமளியாதீர். எல்லோரும் இறைவனின் குழந்தைகள் என்ற உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு இஷ்டமான எந்த வடிவத்திலும் நீங்கள் இறைவனை வழிபடலாம். ஆனால் இறைவன் ஒருவனே என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153. அன்பை செப்பனிடுவதன் மூலம் எல்லோர் மத்தியிலும் ஒற்றுமையையும் இணக்கத்தையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

154. **ஆன்மா**
ஆன்மா இறப்பதில்லை. உடல் மட்டுமே அழிகிறது. மனிதன் இதை அறிந்து கொள்ளும் போது - இறப்பு தன் கடுகடுப்பை இழக்கிறது. இறப்பு அஞ்சப்படுவதில்லை. மேலும், இறப்பானது தெரிந்த துறைமுகத்துக்கான வரவேற்புக்குரிய பயணம் ஆகிறது.

155. மணலில் விழும் மழை நீர் கீழே ஊடுருவுகிறது. சிவந்த மண்ணில் விழும் மழை நீர் தேங்குகிறது. சிப்பியில் மழை விழும் போது முத்து பிறக்கிறது. இவை போலவே ஒவ்வொருவரின் பெறுமதிக் கேற்ப பக்தி வளர்கிறது.

156. பிறருக்காக பிரார்த்திப்பவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டவர்கள். அவர்கள் சகல ஜீவராசிகளிலும் ஊடுருவும் ஏகதத்துவத்தை (ஒன்றான தன்மையை) புரிந்து கொள்கிறார்கள்.

157. அன்பின் மற்றெல்லா வடிவங்களிலும் இறைவன் மீது செலுத்தும் பக்தியே பிரதானமான பிரயாசையாக இருத்தல் வேண்டும்.

158. உங்களில் நம்பிக்கை வைத்துக்கொண்டு, இறை அன்பின் தன்மையை விளக்கப் பிரயாசைப்படுங்கள். அந்த அன்பைப் பூரணமாகப் பெறுவதே மனித வாழ்வின் பிரதான இலக்காகும்.

159. நம்பிக்கையால் மனிதன் எதையும் சாதிக்க முடியும். இறைநிலையை எய்தவும் நம்பிக்கையே அத்திவாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. **The 5 Ds**

| | | |
|---|---|---|
| Determination | - | தீர்மானம் |
| Dedication | - | அர்ப்பணம் |
| Devotion | - | பக்தி |
| Discipline | - | ஒழுக்கம் |
| Discrimination | - | பகுத்தறிவு |

161. **விபூதியின் தனிச்சிறப்பு**

நான் சங்கேதத்தினால் உருவாக்குபவை ஆற்றல் மிக்க, தனிச்சிறப்பும் தெய்வீக வெளிப்பாடும் கொண்ட பொருட்கள் ஆகும். அவை பிரபஞ்சம் தழுவிய, அழிவற்ற, எல்லையற்ற இயல்பு கொண்ட இறைவனின், ஆன்மாவின் அடையாளச் சின்னங்கள் ஆகும். லௌகீகமான, நிலையற்ற, மாறும் தன்மை கொண்ட வஸ்துக்கள் யாவும் அழிந்த பின் நிலை நிற்பது அதுவே.

அது இறுதியில் சாம்பலாகும் வாழ்வு / இறப்பு வட்டத்தின் அடையாளச் சின்னம் ஆகும்.

புழுதியே உடம்பின் தன்மை உடல் மீண்டும் புழுதி ஆகும்.

சாம்பல் அல்லது புழுதியே பொருட்களின் கடைசி நிலைமை. அது மேலும் எந்த மாற்றத்துக்கும் உட்படாது.

இதன் ஆத்மீக விளக்கம் - "ஆசைகளைப் பொசுக்கி, எல்லாத் தீவிர உணர்ச்சிகளையும், பற்றுதல்களையும், ஈர்ப்புகளையும், எண்ணம், சொல், செயல் யாவற்றையும் சுட்டெரித்துத் தன்னைத் தூய்மையாக்கும்படி சாதகனுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கை" என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162. உலகம் பிரபஞ்ச ஆன்மாவின் கோவில் ஆகும்.

163. "பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா இவ் வீட்டின் தலைவர், ஒவ்வொரு சம்பாஷனையையும், அமைதியாக அவதானிப்பவர். ஒவ்வொரு நேர உணவின் போதும், காணப்படாத விருந்தாளியாக இருப்பவர்" என நினைவில் வைத்திருங்கள்.

164. **அமைதி**
நீயாகவே அமைதியாயிரு. அது மற்றவர்களிலும் அமைதியைத் தூண்டும். சத்தம் போடுவதையும், உரத்துப் பேசுவதையும் விட்டுவிடு. தொடர்புகளை இயலுமானவரை குறைத்துக்கொள். நீ எங்கிருந்தாலும், அமைதியான சுற்றுபுறத்தைப் பேணிக்கொள்.

165. சிலர் எப்பொழுதும் ஆரவாரமாகவும், பெரும் உயர் சப்தத்தினுடனும் வாழ்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கண்காட்சியில் நின்றாலும், சந்தையில் நின்றாலும், உணவகத்தில் நின்றாலும், ஏன், பிரசாந்தி நிலைய ஆலயத்தில் நின்றாலும் கூட, நாவை உழற்றிக் கொண்டே இருப்பார்கள். நிறுத்தவே மாட்டார்கள். இவை இறைவனை நோக்கிய பாதையில் நெடுந்தூரம் செல்ல மாட்டா.

166. கதைக்கத் தொடங்கு முன்
இது அவசியமானதா?
இது உண்மையானதா?
இது கருணையானதா?
இது யாரையும் துன்புறுத்தாதா?
மௌன மூலம் இதனை மேம்படுத்த முடியுமா?
என்பவற்றை சிந்தியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

167. அமைதி என்பது எமது வைராக்கியத்தைச் சார்ந்தது அல்ல. அது என்றும் உள்ளது. அமைதி உங்களூடாகத் தொடர்ச்சியாக ஓடிக்கொண் டிருக்கும் இறைதத்துவம் ஆகும்.

168. உனக்கு ஓய்வு நேரம் கிடைக்கும் போது அற்ப விடயத்தைப் பற்றிப் பேசுவதில் அந்நேரத்தை செலவிடாதே. இறை தியானத்தில் அல்லது பிறருக்குச் சேவை செய்வதில் அந்நேரத்தைச் செலவிடு.

169. உன்னை கலக்கத்தினதும் பொய்மையினதும் மையம் என கற்பனை செய்யாதே. நீ அமைதியின் வடிவம். உன்னில் அன்பு என்னும் இரத்தமே பாய்கிறது. உன் சுபாவம் ஆனந்தம்.

170. நான் எப்பொழுதும் உன்னுடன் இருப்பதையும் உன்னை அறநெறியில் உந்துதல் செய்து கொண்டே இருப்பதையும் உன்னை வழிநடத்திக் கொண்டு இருப்பதையும் உணர்ந்து தொடர்ச் சியான அந்த உணர்வில் வாழ்.

171. நீ உன்னைக் கடவுள் என நினைத்தால் நீ கடவுளே.

நீ உன்னைத் தூசாக நினைத்தால் நீ தூசே.

நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகிறாய்

கடவுளாய் நினை. கடவுளாய் இரு.

172. உன் இதயத்தை அமைதியின் மாளிகை ஆக்கு.

173. இறைவனில் வாழ். ஏனையோரையும் இறைவனில் வாழ்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

174. மனிதனுக்குத் தேவையான பலம் எல்லாம் பொறுமையே (பரபரப்பின்மை).

175. மிதமாய் உண்டு நெடுநாள் வாழ்.

176. உண்ணும் உணவை நற்சிந்தனைகள், நல் வார்த்தைகள், நற்செயல்களாக மாற்று.

177. நீ அன்பை வளர்ப்பாயானால், அதற்கீடானது வேறெதுவும் இல்லை.

178. அன்மீகவாதியின் மொழி மௌனமே.

179. உலக அமைதியும், தனிநபரின் அமைதியும் ஒரே நேரத்தில் ஏற்படக்கூடியவை.

180. வாழ்வதற்காக உண். நீ வாழ்வது உண்பதற்காக என்று எண்ணிவிடாதே.

181. அன்பு எந்த வெகுமதியையும் எதிர்பாராதது. தானே தனது வெகுமதி ஆனது.

182. காலம், இடம், காரணம், மூலப்பொருட்கள், சிந்தனை, திறமை, சந்தர்ப்பம், நற்பலன் இவற்றை இறைவனே தந்துள்ளார். நீயே கர்த்தா என்பது போல் நீ உணர்வது ஏனோ?

183. திருப்தியிலும் மேலான மகிழ்ச்சி இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

184. வாற்பேத்தை தவளை ஆகும்போது அதன் வால் அழிகிறது. அதுபோல் ஒருவர் அறிவில் முதிர்ச்சி அடையும் போது அகங்காரம் அழிந்துவிடும். வாற்பேத்தையின் வாலை வெட்டினால் வாற்பேத்தை இறந்துவிடும். அந்தவால் போன்றதே அகங்காரமும். எனவே அகங்காரம் இருப்பதையிட்டுக் கவலைப்படாதே. அறிவை வளர்த்துக்கொள். புற உலகப் பொருட்களின் நிலையாமையைப் பகுத்தறிந்துகொள். அகங்காரம் தானாகவே அழிந்து போகும்.

185. உங்களுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள தூரம், உங்களுக்கும் தங்களுக்கும் இடையே உள்ள தூரம் ஆகும்.

186. வேலையே வழிபாடு ; கடமையே கடவுள் கடமை, ஒழுக்கம், பக்தி இவையே நன்னெறிகள்.

187. உறோசா மலர் நறுமணம் என்னும் மொழி மூலம் மௌனமாகப் பேசுகிறது. உன் வாழ்வையும் அவ்வாறே அமைத்துக்கொள்.

188. தெய்வீகம் எல்லோரிலும் உறைவதை நாம் உணராத வரை நாம் மனிதராகவே இருக்க முடியாது. தெய்வமாய் இருப்பது எங்ஙனம்?

189. ஒரு நாளில் உள்ள 24 மணித்தியாலங்களில், சம்பாதிக்கவும் செலவு செய்யவும் 6 மணித்தியாலங்களையும். கடவுளை ஆழ்ந்து தியானிக்க 6 மணித்தியாலங்களையும். நித்திரைக்கு 6 மணித்தியாலங்களையும் பிறர்க்கு சேவை புரிய 6 மணித்தியாலங்களையும் பயன்படுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190. உறுதியாய் இருப்பதற்காக கற்றலை மேற்கொள்.

191. எப்பொழுதும் உதவு. ஒருபோதும் துன்பம் செய்யாதே.

192. துவைதக் கொள்கையுடன் சமுதாயத்தில் இறங்கி அத்துவித கொள்கையுடன் சேவையில் ஈடுபடு.

193. பாவம் செய்வதற்கு அஞ்சுவதிலேயே அமைதியையும், அகிம்சையையும் அனுபவிக்க முடியும்.

194. நற்காட்சியும் நல்லுறவுகளும் புனித எண்ணங்களிலேயே தங்கியுள்ளன.

195. ஒவ்வொரு மூச்சின் போதும் இறைவனை நினைவுகூரும் பழக்கத்தை வளர்த்துக்கொள். அப்படியானால் மட்டுமே இறுதி மூச்சின் போதும் இறைவனை நினைவு கூர்வாய்.

196. சங்கரரின் அறிவும், புத்தரின் இதயமும், ஜனகரின் கரங்களும் கொண்டிருப்பாயாக.

197. மனித விழுமியங்கள் :

சத்தியம்
தர்மம் (நன்னடத்தை)
சாந்தி (அமைதி)
பிரேமை (அன்பு)
அகிம்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

198. நீ பிறந்தது ஒரு நோக்கத்துக்காக - இறப்பதற்கு. அதாவது அகங்காரத்தைக் கொல்வதற்கு.

199. எமது இலக்கியங்கள், முயற்சிகள், ஆன்மீகப் பயிற்சிகள், அறிவுரைகள் யாவையுமே, உன்னை நீயே கண்டுகொள்ள உன் முன்னே வைக்கப்படும் கண்ணாடிகளே.

| | |
|---|---|
| 200. W-A-T-C-H | அவதானியுங்கள் |
| Your | உங்கள் |
| Words | சொற்களை |
| Actions | செயல்களை |
| Thoughts | எண்ணங்களை |
| Character | சீலத்தை |
| Heart | இதயத்தை |

201. உங்கள் எஜமானின் வழியில் வாழுங்கள்
தீமையை எதிர்கொள்ளுங்கள்
இறுதிவரை போராடுங்கள்
கருமத்தை முடித்துக்கொள்ளுங்கள்

202. செயல் இல்லாத அறிவு பயனற்றது.
அறிவற்ற செயல் மடத்தனமானது.

203. மனதை புலன்களின் அடிமை ஆக்காமல் இறைவனின் சேவகன் ஆக்குங்கள்.

204. மனித உடல் ஆலயம்.

205. உன் இதயம் என் இருப்பிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206. “ஓம்” அம்பு, கடவுள் இலக்கு

207. வாழ்வு + ஆசை = மனிதன்
வாழ்வு - ஆசை = கடவுள்


208. உன் இதயத்தில் தெய்வீகம் மலரும் நாளே என் பிறந்த நாள்.

209. சோம்பல் - கறளும் புழுதியும்
இறை உணர்வு பெறுதல் - ஆறுதலும் அதிசிறந்ததும்.

210. நான் சத்தியத்தின் சத்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்பாசிரியரின் (அன்றூஷோ)

## பிரார்த்தனை

இவ்வேளையில் நாம் கிறிஸ்துவின் வாழும் வடிவங்களாக இறைவனின் திட்டத்தைச் செயற்படுத்த இப் பூமியில் வந்துள்ளோம்.

நாம் எமது இதயங்களை விரிவாக்கி, பிராணனினதும், ஜீவசக்தியினதும், பூரண ஒளிக்கான கேட்கையினதும் ஆத்மார்த்த செய்தியை கிடைக்கப் பெறுகிறோம்.

இனங்களுக்கு அப்பாற்பட்டு, அன்பின் கலங்கரை விளக்காய் விளங்கும் சத்திய தெய்வமே! சத்திய தெய்வமே! எங்கள் ஆன்மாவைத் தங்களுக்கு அர்ப்பணிக்கிறோம்.

தங்களுக்காகத் தவிக்கும் கூட்டு உணர்வுச் சக்தியால் உந்தப்பட்டோராய் தங்களை அணுகுகிறோம்.

இப்போது எங்கள் இறையுணர்வு வெளிப்படுகிறது. நாம் பேரொளியின் வாரிசுகள். ஆதிமூலம் தன் குழந்தைகளை மகிமையுடன் சொந்த வீட்டுக்குத் திரும்புமாறு ஆகர்ஷிக்கிறது.

எல்லையற்ற ஏகனான இறைவன் எங்கள் ஆத்மத்துவ பிரதிக்ஞையை உறுதிப்படுத்துகின்றார். நாம் உணரும் தெய்வீக அதிர்வுகள் எங்கள் இதயங்களை ஆன்மாவில் நிரப்புகின்றன.

எனவே எங்கள் ஆனந்த ஐக்கியத்தைஇட்டு போற்றி மகிழ்வோம்.

நாம் இப்போ சுதந்திரமானவர்கள்.
நாம் இப்போ ஒருவரே.

பிரகாஷ் பதிப்பகம், கரவெட்டி, அளவெட்டி வடக்கு.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org